ஒரு சனிக்கிழமை பிற்பகல் பிள்ளைகள் எல்லோரும் வீட்டில் இருந்தார்கள். அம்மாவிடம் காசு கேட்டார்கள். ஆண்டாள் "எதற்கு?" என்று கேட்டாள்.

"பண்டம் வாங்கவேண்டும்" என்று மூர்த்தி சொன்னான். அவனுக்கு எப்போதும் தின்பண்டத்தின்மேல் ஆசை.

"கொஞ்சநேரம் இருங்கள். நான் வடை சுடப் போகிறேன். எல்லோரும் வடை சாப்பிடலாம்" என்று ஆண்டாள் சொன்னாள்.

ஆண்டாள் வடை சுட்டாள். அப்போதெல்லாம் மூர்த்தி வடைகளை எடுத்துத் தின்றான். பிறகு அம்மா எல்லோருக்கும் வடை கொடுத்தாள். அப்போதும் மூர்த்தி வடை தின்றான்.

மிச்ச வடைகளை ஆண்டாள் ஒரு சட்டியில் வைத்தாள். அவளுக்கு மூர்த்தியின் குணம் தெரியும். அதனால் வடைச் சட்டியைச் சமையலறையில் ஓர் உயரமான இடத்தில்

வைத்தான்.

ஆண்டாள் கூடத்தில் உட்கார்ந்தாள். அவளுக்குப் பக்கத்தில் மூத்த பிள்ளைகள் கிருவரும் உட்கார்ந்தார்கள். அவர்கள் மூர்த்தியைப் பார்க்கவில்லை. மூர்த்தி சமையலறைக்குப் போனான். வடைச் சட்டி உயரே கிருந்தது. அவன் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்தான். நாற்காலிக்குமேலே ஒரு 'ஸ்டூ'லை வைத்தான். 'ஸ்டூ'லின்மேலே ஏறினான். சட்டியிலிருந்து வடைகளை எடுத்தான். கொஞ்ச நேரத்தில் சட்டியில் வடையே கில்லை.

மாலையில் ஆண்டாள் சமையலறைக்குள்ளே போனாள். வடைச்சட்டி காலியாய் கிருந்தது. அவளுக்கு ஆச்சரியமாய் கிருந்தது. பிள்ளைகளைக் கூப்பிட்டாள்.

"வடைகளை யார் எடுத்தார்கள்?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாது" என்றாள் வசுந்தா.

"நான் பார்க்கவில்லை" என்றான் ராமையா.

"நான் எடுக்கவில்லை" என்றான் மூர்த்தி.

"திருடன் வெளியிலிருந்து வாவில்லை. கிங்கேதான் கிருக்கிறான். அவனுடைய வயிறே சொல்கிறதே! அவனுடைய வயிற்றில் கரி தெளிவாய்த் தெரிகிறதே!" என்றாள் ஆண்டாள்.

18.47
18.52

வசுந்தாவும் ராமையாவும் சும்மா நின்றார்கள். மூர்த்தி தன் வயிற்றைத் துடைத்தான்.

ஆண்டாள் சிரித்தாள். "திருடன் அகப்பட்டான்" என்றாள். மூர்த்திக்குப் புரியவில்லை. வசுந்தாவும் ராமையாவும் சிரித்தார்கள்.

19. மங்கிரவாகியின் காதல்

ஓர் ஊரில் ஒரு கிழவி. அவளுக்கு ஓர் அழகான பெண். அந்தப் பெண்ணின் பெயர் பஞ்சி. அந்த ஊரில் எல்லோருக்கும் பஞ்சியைப் பிடிக்கும். அந்த ஊரில் ஒரு மங்கிரவாகி உண்டு. அவனுக்குப் பஞ்சி மேல் காதல்.

ஒரு நாள் கிழவியும் பஞ்சியும் தொழுவில் கிருந்தார்கள். அங்கே ஓர் எருமையும் கிருந்தது. மங்கிரவாகி அங்கே வந்து பஞ்சியிடம், "என்னைக் கல்யாணம் செய்து கொள்" என்று சொன்னான். அவள் பதில் சொல்லவில்லை. அவளுடைய அம்மா, "என் தம்பிக்கு ஒரு மகன் கிருக்கிறான். அவனுக்கும் கிவளுக்கும் தான் கல்யாணம்" என்று நினைத்துச் சொன்னாள்.

மங்கிரவாகி, அப்படியா?! கிது கினிப்பான செய்தி! நானும் உங்களுக்கு கினிப்புக் கொடுக்க வேண்டாமா? அம்மா! கிந்தாருங்கள். உங்களுக்கு ஒரு மாம்பழம். பஞ்சி! உனக்கு கிந்த மாம்பழம்" என்று சொன்னான்.

அது வெறும் தந்திரம். அந்த மாம்பழத்துக்கு ஒரு மந்திர சக்தி உண்டு. அந்தச் சக்தியால் பஞ்சிக்குக் காதல் உண்-

டாக வேண்டும். அதுதான் மந்திரவாதியின்
திட்டம். பஞ்சிக்கு அவனுடைய திட்டம்
புரிந்தது. அவள் அந்த மாம்பழத்தைச்
சாப்பிடாமல் எருமைக்குக் கொடுத்தாள்.
உடனே எருமைக்கு மந்திரவாதி மேல்
காதல் உண்டாயிற்று. அது மந்திரவாதி
பக்கத்தில் ஓடிற்று. அவன் தன் வீட்டுக்கு
ஓடி உள்ளே போய்க் கதவை அடைத்தான்.
எருமை கதவை உடைத்து வீட்டுக்குள்ளே
ஓடி மந்திரவாதிமேல் பாய்ந்தது. மந்திர-
வாதியால் எருமையிடமிருந்து தப்ப முடிய-
வில்லை. எருமை அவனை முட்டிக் கொன்றது.

கினிமேல் அந்த மந்திரவாதி தன்
தந்திரங்களால் பெண்களை ஏமாற்ற
மாட்டான்.

(கன்னட நாடோடிக் கதை)

In addition to those on p. 11, the following words have occurred three times in the readings so far. Are you now familiar with the meanings of most of them?

இல்லை
பார்
வேறு
கோயில்
மிக, மிகவும்
பக்கம்
சில
ஒன்று
இரண்டு
அதிகம்
ஆறு (not the numeral)
கிழக்கு
நாடு
கடல்
மேன்று
வீடு
நல்ல
அங்கே/இங்கே/எங்கே
அப்போது/இப்போது/எப்போது
கை
அம்மா
அப்பா
கதை
சாமி
நடு
சொல் (w)
போ (w)
அதனால்
சின்ன
என்ன
முன், முன்னே
ஏன்
வரு (w)
நேரம்
வெளியே
உள்ளே
கால் (part of the body)
அழகு
பெண்
வேலை
குடும்பம்
கிடையாது
ஆசை
கரை
செய் (w)
கொடு (s)
இடம்
பின்னே
ஏறு (w)
தெரி (w)
அப்படி/இப்படி/எப்படி
ஓடு (w)
சாப்பிடு (w)
நாள்
மேல், மேலே
கல்யாணம்

20. பாவம் யாருக்கு?

என் நண்பன் நடராசன் ஒரு விசித்திரமான ஆசாமி. அவன் யாருக்கும் கீங்கு செய்ய மாட்டான். புழு பூச்சிகளிடத்திலும் இரக்கம் காட்டுவான். காப்பியில் ஈ விழுந்தால் அவன் அந்த ஈயைச் சாக விட மாட்டான்; ஈயை எடுத்துத் தனியில் வைப்பான். ஈ காப்பியில் செத்துக்கிடந்தால் அவன் அந்தக் காப்பியைக் குடிக்க மாட்டான்.

ஒரு நாள் நாங்கள் இரண்டு பேரும் ஒரு கல்யாணத்துக்குப் போனோம். கல்யாணம் முடிந்தது. எல்லோரும் பந்தியில் உட்கார்ந்தோம். சாப்பாடு பரிமாறினார்கள். நடராசனுடைய இலைக்குப் பக்கத்தில் ஒரு பாச்சா வந்தது. அவன் இடதுகையால் அதைத் தள்ளினான்; வலது கையால் சாப்பிட்டான். பாச்சா மறுபடியும் வந்தது. அவன் மறுபடியும் தள்ளினான். இப்படி அவனுக்கும் பாச்சாவுக்கும் கொஞ்ச நேரம் போராட்டம் நடந்தது. அவனுக்கு வலது பக்கத்தில் ஒரு பெரியவர் இருந்தார். அவரால் பொறுக்க முடியவில்லை. அவர் பாச்சாவை

ஒரே அடியில் கொன்றார். "பாவம்" என்று நடராசன் முணுமுணுத்தான். "எந்த உயிரை-
யும் கொல்லக் கூடாது என்று அவருக்குத் தெரியாதா?" என்று என்னிடம் சொன்னான்.

"வீட்டுக்குள்ளே தேள் வந்தால் அந்தத் தேளை அடிப்பாயா மாட்டாயா?" என்று கேட்-
டேன்.

"என்றைக்கும் நான் அடிக்க மாட்டேன்" என்றான் அவன்.

"உனக்காக மற்றவர்கள் அடிக்கிறார்கள், இல்லையா? அந்தப் பாவம் உன்னைத்தானே சேரும்?"

"அவர்களை நான் அடிக்கச் சொல்ல-
வில்லையே!"

அதற்கு மேல் நான் என்ன சொல்ல-
முடியும்! நடராசனைத் யார் வாதிட முடியும்!

21. வானமும் மரமும்

முன் ஒரு காலத்தில் ஒரு செடி வயலோ-
ரத்தில் வளர்ந்தது. அது வளர்ந்து பெரிய
மரம் ஆயிற்று. மரத்தின் கிளைகள்
வானத்தில் விரிந்தன. வானம் கோபம்
அடைந்தது. "ஏ மரமே! நீ மண்ணில்
பிறந்தாய். மண்ணில்தான் இருக்க
வேண்டும். உன் சாதி தாழ்ந்த சாதி.
உன் நிலை தாழ்ந்தது. நீ என் எல்லைக்-
குள் நுழையக் கூடாது" என்று சொன்னது.

மரம், "அட! நீ உயரமான இடத்தில்
இருக்கிறாய். அதனால் உன் சாதி உயர்ந்த
சாதியா? உன் நிலை உயர்ந்ததா?" என்று
கேட்டது.

"ஆமாம். எல்லாப் பொருள்களையும்
நான்தான் தாங்குகிறேன். எல்லாவற்றையும்
நான் பார்க்க முடியும். எனக்கு அறிவு
அதிகம். உனக்கு என்ன தெரியும்?"

"ஐயா அறிஞரே! நான் முட்டாள்தான்.
எல்லாவற்றையும்விட உன் பெருமைதான்
மிகுந்தது. உன்னால் வளர முடியாது. நான்
வளர வேண்டும். என் வளர்ச்சிக்கு இடம்
வேண்டும்."

"என்னைக் கேலி செய்கிறாயா? உன்னை என்ன செய்கிறேன், பார்."

வானம் கிடீரென்று வெப்பத்தைக் குறைத்தது. கிளைகளால் குளிரைத் தாங்க முடியவில்லை. கிளைகள் பழுத்துக் காய்ந்து உதிர்ந்து காற்றில் பறந்தன. மரம் மொட்டை ஆயிற்று. "அழகிய மரமே! உன் வளர்ச்சி எங்கே? உன் கிளைகளெல்லாம் எங்கே?" என்று வானம் கேலி செய்தது.

"நீ என் உடம்பை மாற்றலாம். என் உயிரை அழிக்கமுடியாது" என்றது மரம்.

"பார்க்கலாம்."

வானம் பனியைப் பொழிந்தது. திசையெல்லாம் பனி. மரமெல்லாம் பனி. குளிரைத் தாங்கமுடியவில்லை. புயல் வீசியது. அப்போதும் மரம் விழவில்லை.

மூன்று மாதம் கழிந்தது. வானம் சோர்ந்தது. மரம் தளிர்த்தது. தளிர்கள் கிளைகள் ஆயின. கொஞ்சகாளில் பூக்களும் காய்களும் உண்டாயின. மரம் அழியவில்லை.

22. கெட்டிக்கார மந்திரி

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான். அவன் நிரம்பக் கொடியவன். அவனுடைய மந்திரி பெரிய அறிவாளி. ஒரு நாள் அரசன் மந்திரியோடு கடற்கரைக்குப் போனான். "மந்திரியாரே! நீர் பெரிய அறிவாளி; கில்லையா? இந்தக் கடற்கரையில் எத்தனை மணல்கள் இருக்கின்றன? சொல்லும், பார்ப்போம்" என்று சொன்னான்.

மந்திரி கொஞ்ச நேரம் யோசித்தார். பிறகு சொன்னார்: "ஒரு லட்சத்து எண்பத்தேழாயிரத்துக் கொள்ளாயிரத்து அறுபத்து மூன்று".

"நன்றாய் யோசித்துச் சொல்லும். எண்ணிக்கை அதிகமாய் இருந்தால் உம்முடைய தலையை வெட்டுவேன். குறைவாய் இருந்தால் உம்மைக் கடலில் வீசுவேன்."

"அரசே! நான் சொன்ன எண்ணிக்கை சரி தான்."

"தப்பு. நீர் சொன்னதைவிட மணலின் எண்ணிக்கை ஆயிரத்தெட்டு அதிகம்."

"அரசே! அலகைப் பாருங்கள். நான் சொன்ன பிறகு கிங்க ஒரு நிமிடத்தில் கிங்க அலகள் மணலைக் கூட்டிவிட்டன."

அரசன் யோசித்தான். மந்திரி சொன்ன பதில் நியாயம்தான். ஆனால் அவரை எப்படியும் மடக்க வேண்டும்.

அரசன் சொன்னான்: "நான் முதலில் சொன்னது தப்பு. நீர் சொன்னதை விட மணலின் எண்ணிக்கை ஆயிரத்தெட்டுக் குறைவு."

"அரசே! காற்றினுடைய வேகத்தைப் பார்த்தீர்களா? காற்று மணலைக் குறைத்து விட்டது."

மந்திரியை மடக்க முடியாது என்று அரசனுக்குத் தெரிந்தது. அரசன் "மந்திரியாரே! நீர் கெட்டிக்காரர்தான்" என்று சொல்லி அவரை முதல் மந்திரி ஆக்கினான்.

(நாடோடிக் கதை)

23. புலவரும் மந்திரியும்

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான். அவன் நல்லவன். ஆனால் அவனுடைய மந்திரி பெரிய கஞ்சன். ஒரு நாள் அரண்மனைக்குப் பல புலவர்கள் வந்தார்கள். புலவர்கள் அரசனைப் பாடிப் புகழ்ந்தார்கள். அரசன் மந்திரியிடம், "இவர்களுக்கு எவ்வளவு பணம் கொடுக்கலாம்?" என்று கேட்டான்.

மந்திரி சொன்னார்: "இவர்கள் உங்களைப் பாடப் பல நாள் நீடுத்து வந்திருக்கிறார்கள். ஒரு நாளுக்கு ஒரு ரூபாய் வீதம் கொடுக்கலாம்."

ஒரு புலவர் உள்ளூர்க்காரர். அப்படியானால் அவருக்கு ஒரு ரூபாய்தான் கிடைக்கும். ஆகவே அவர் "நான் வைகுண்டத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்று சொன்னார்.

"வைகுண்டத்துக்கு எவ்வளவு தூரம்?" என்று அரசன் மந்திரியிடம் கேட்டான்.

விழுந்து குடியிருக்கும் வைகுண்டமா?!

புலவருக்கு ஆயிரமாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமே! மந்திரி அவ்வளவு பணம் கொடுக்க விரும்பவில்லை. (அவர் கஞ்சன்



அல்லவா?) ஆகவே, "கூப்பிடு தூரம்"
என்று சொன்னார்.

"எப்படி?" என்று அரசன் கேட்டான்.

மந்திரி "ஒரு காலத்தில் கஜேந்திரன்
என்று ஒரு யானை இருந்தது. ஒரு நாள்
அந்த யானை பக்கத்தில் இருக்கும்
குளத்தில் தண்ணீர் குடிக்க இறங்கியது.
ஒரு முதலை அந்த யானையின் காலைக்
கவ்விக் கொண்டது. யானை விஷ்ணுவைக்
கூப்பிட்டது. கூப்பிட்டவுடன் விஷ்ணு
வந்துவிட்டார். யானையின் கஷ்டத்தைப்
பார்த்தவுடன் தம் சக்கரத்தை எறிந்து
முதலையைக் கொன்றார். வைகுண்டத்தில்
இருப்பவருக்கு யானையின் குரல் கேட்டது
என்றால் அது நிறம்பப் பக்கம் தானே?"
என்று சொன்னார்.

பாவம், புலவர்! பொய் சொன்னதும்
புலவருக்கு ஒரு ரூபாய்தான் கிடைத்தது.

24. காகத்தின் கதை

சீதையும் கிராமனும் காட்டில் கூடுங்கார்கள். கல்ல வெயில். கிராமனுக்குக் களைப்பாய் கிருந்தது. கிருவரும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள். கிராமன் சீதையின் மடியில் தலையை வைத்துப் படுத்தான். சிறிது நேரத்தில் உறங்கி விட்டான்.

கிந்திரனுடைய மகன் சயந்தன் அந்த வழியாக வந்தான். அவன் சீதையைப் பார்த்தான். அவளுடைய அழகு அவனைக் கவர்ந்தது. அவளிடம் பேசிப் பார்த்தான். அவள் அவனோடு பேசவும் கில்லை; அவனைப் பார்க்கவும் கில்லை.

சயந்தன் ஒரு காகத்தின் உருவெடுத்தான். சீதையின் தோளில் உட்கார்ந்து அவளுடைய மார்பைக் கொத்தினான். சீதைக்கு மிகவும் வலித்தும் அவள் சிறிதும் அசையவில்லை. கொஞ்சம் அசைந்தாலும் கிராமனுடைய தூக்கம் கெட்டுவிடுமே என்று அவள் கினைத்தாள். அவளுடைய மார்பிலிருந்து கிரத்தம் பொங்கிற்று. அப்போதும் அவள் அசைய-

வில்லை; அலறவும் கில்லை. கிராமன் மேல்
அவளுக்கு அவ்வளவு அன்பு! கிரகத்தம்
சிகையின் பொறுமை அவன் மனக்கை
நெகிழ வைக்கது. சயங்கனின் சிறுமையோ
பெரும் கோபத்தை உண்டாக்கியது.
பக்கத்தில் புல் நிறைய வளர்ந்திருந்தது.
கிராமன் ஒரு புல்லைப் பறித்து வில்லாக
வளைத்தான். மற்றொரு புல்லை அம்பு
ஆக்கினன். "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்",
அல்லவா? "காகம்" பறந்தது; மூன்று
உலகத்திலும் பறந்தது. ஆனால் கிராமனின்
அம்பிலிருந்து தப்ப முடியவில்லை. திரும்பவும்
கிராமனிடமே சயங்கன் வந்தான். கிராம-
னுடைய கால்களில் விழுந்தான். மன்னிக்கும்
படி வேண்டினன். "அம்புக்கு ஒரு போக்கிடம்
வேண்டுமே! காமத்தோடு சிகையைப்
பார்த்த உன் கண்களில் ஒன்றைக்
கொடு" என்றன் கிராமன்.

அம்பு ஒரு கண்ணை மட்டும் துளைத்தது.
அதனால்தான் இன்றைக்கும் காகத்துக்கு
ஒரு கண் தெரியாது. தலையைச் சாய்த்துத்தான்
எந்தப் பொருளையும் காகம் பார்க்கிறது.

In addition to those on pp. 11 and 47, the following words have occurred three times in the readings so far. Are you now familiar with most of them?

எடு (s)
நட (s)
உட்கார் (w)
யார்
பாவம்
வலது
இடது
மற்ற
கேள் (s)
காலம்
அடடா!
எட்டு
ஆறு (the numeral)
சரி
இறங்கு (w)
தண்ணீர்
குடி (s)
உடனே
விடு (w)
கொல் (w)
பல
தூரம்
தலை
பொருள்
வை (s)
நினை (s)
அல்லவா?
ஆனால்
விழு (w)
வழியாக
நிறைய
மனம்
பேசு (w)

25. பிள்ளையார் பிறப்பு - 1

தமிழ் நாட்டுக் கடவுள்களில் பிள்ளையாரும் ஒருவர். இவருக்குக் கணபதி, கணேசர், விநாயகர், விக்கினேசுவரர் என்று பல பெயர்கள் உண்டு. இவர் யானைத் தலையும் மனித உடம்பும் உடையவர். இவர் பரமசிவனுடைய மூத்த பிள்ளை என்று சொல்கிறார்கள்.

பிள்ளையார் பிறப்பைப் பற்றி ஏராளமான கதைகள் இருக்கின்றன. அவைகளில் ஒரு கதைதான் இது.

ஒரு நாள் பரமசிவனுடைய மனைவி பார்வதி குளத்தில் குளிக்கப் போனாள். தான் குளிக்கும் போது ஆண்கள் யாராவது அங்கே வந்து தன்னைப் பார்த்து விடுவார்களோ என்று அவள் பயப்பட்டாள். குளத்தங்கரையில் யாரையாவது காவலுக்கு வைக்க வேண்டும் என்று நினைத்தாள். தோழிகளில் யாரும் அங்கே இல்லை. என்ன செய்வது? பார்வதி தன் உடம்பைச் சுரண்டினாள். அழுக்கு அவள் கையில் திரண்டது. அந்த அழுக்குருண்டையை மனித உருவம் போலச் செய்து கரையில் வைத்தாள். தண்ணீருக்குள்

கிறங்கிக் குளிக்க ஆரம்பித்தாள்.

பாமசிவன் பார்வதியைத் தேடினார்.

அவருக்கு ஓர் அவசரமான காரியம். அவளோடு பேச வேண்டும். ஆனால் அவளைக் காணவில்லை. அவள் குளத்துக்குப் போயிருக்கிறாள் என்று யாரோ சொன்னார்கள். அவர் வேகமாகக் குளத்துக்கு வந்தார். கையில் கிருந்த அழுக்குருண்டை அவரைத் தடுத்தது.

"தேவி குளிக்கிறார்கள். யாரும் உள்ளே போகக் கூடாது" என்று சொன்னது.

"நான் அவளுடைய கணவன்" என்றார் பாமசிவன்.

"யாராலும் உள்ளே போகக் கூடாது."

பாமசிவனுக்குக் கோபம் வந்தது. அந்த உருண்டையின் தலையைக் கிள்ளி எறிந்தார். அப்போது அங்கே வந்த பார்வதி "என் பிள்ளையைக் கொன்றுவிட்டீர்களே!" என்று அழ ஆரம்பித்தாள்.

"கிந்த உருண்டை உன் பிள்ளையா?!" என்றார் சிவனர்.

"கிது என் உடம்பிலிருந்து பிறந்தது. என் உடம்பிலிருந்து பிறப்பது என் பிள்ளை தானே?"

"கிப்போது என்ன செய்வது?"

"அந்தத் தலையை கிந்த உடம்போடு

ஒட்ட வைக்கவேண்டும். கிலையைக் கேடிப் பாருங்கள்."

பாமகிவன் சுற்றிலும் கேடிப் பார்க்-கார். அந்த அழுக்குருண்டையின் கிலை அகப்படவே கில்லை. "கிப்போது என்ன செய்யலாம்?" என்று கேட்டார்.

"எங்கிருந்காவது வேறு ஒரு கிலை கொண்டு வாருங்கள். என் பிள்ளை செத்த நோக்கில் வேறு எத்தனைபேர் செத்திருப்-பார்கள்! அவர்களில் ஒருவருடைய கிலையைக் கொண்டுவாருங்கள்."

பாமகிவன் ஓடினார். காட்டுக்குள் ஒரு யானை செத்துக்கிடந்தது. அவர் அதனுடைய கிலையை அறுத்துக் கொண்டு வந்தார்.

பார்வதி அந்த யானைக் கிலையையும் அழுக்குருண்டையின் மனித உடம்பையும் ஒட்ட வைத்தாள். அந்த உருவம்தான் பிள்ளையார்.

26. பிள்ளையார் பிறப்பு-2

ஒருநாள் பாமகிவனும் பார்வதியும் ஒரு காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்-தார்கள். அந்தக் காட்டில் ஓர் ஆண் யானை-யும் பெண் யானையும் கின்பம் அனுபவித்துக் கொண்டிருந்தன. பாமகிவன் அதைப் பார்த்-தார். கின்பம் அனுபவிக்க வேண்டும் என்று அவருக்கு ஆசை வந்தது. "பார்வதி! பார்த்தாயா?" என்றார்.

"எதை?"

"அதோ, அந்த ஆண் யானையும் பெண் யானையும் கின்பம் அனுபவிக்கிறதை."

"போங்கள்" என்றாள் பார்வதி. அவளுக்கு வெட்கம்.

பாமகிவன் அவள் பக்கத்தில் போனார். அவளுடைய தோளைத் தொட்டார். "பார்வதி! எனக்கு ஆசையாய் கிருக்கிறது" என்றார்.

"ஆசைக்கு நேரம் காலம் கிடையாதா?"

"கின்பத்துக்கு நேரம் காலம் உண்டா?"

"கிந்த ஆண்பிள்ளைகளே சுத்த மோசம். திடீர்திடீர் என்று அவர்களுக்கு ஆசை வருகிறது; திடீரென்று போய்விடுகிறது".

"பார்வதி! நீ என்ன சொல்கிறாய்?"

"உங்களுக்கு என்ன! ஐந்து நிமிடத்தில் உங்கள் ஆசையைத் தீர்த்துக் கொள்வீர்கள். போய் விடுவீர்கள். என் உணர்ச்சியைப் பற்றி உங்களுக்கு என்ன கவலை?"

பாமசிவன் யோசித்தார். பார்வதியையும் பார்த்தார்; யானைகளையும் பார்த்தார். "பார்வதி! பெண்யானை எத்தனை மாதத்தில் குட்டிபோடும்?" என்று கேட்டார்.

"பதினேழு மாதம் முதல் இருபத்தாறு மாதம் வரை."

"கர்ப்ப காலம் அதிகம்; யானைகள் தின்பம் அனுபவிக்கும் நேரமும் அதிகம், இல்லையா?"

"எனக்கு எப்படித் தெரியும்?"

"சரி. பார்த்து விடுவோம்."

பாமசிவன் ஆண்யானை ஆனார். பார்வதி பெண்யானை ஆனாள். இப்படித்தான் பிள்ளையார் பிறந்தார். அதனால்தான் பிள்ளையார் யானைத் தலையும் மனித உடம்பும் உடையவராய் இருக்கிறார். இப்படி ஒரு கதை!

27. பிள்ளையாரின் தந்திரம்

பாமசிவன் பார்வதியோடு கைலாச மலையில் இருக்கிறார். சிவனது கையில் ஓர் அழகான மாம்பழம் இருக்கிறது. சிவனுடைய பிள்ளைகள் ஆகிய பிள்ளையாரும் முருகனும் அங்கே வருகிறார்கள். இருவரும் அந்த மாம்பழத்துக்கு ஆசைப்படுகிறார்கள். பழத்தை ஒருவருக்குத்தானே கொடுக்க முடியும்? யாருக்குக் கொடுப்பது? சிவன் பிள்ளைகளிடம் சொல்கிறார்: "உங்களில் எவன் வல்லவன் என்று பார்க்கலாம். நீங்கள் இருவரும் உலகத்தைச் சுற்றிவிட்டு வாருங்கள். எவன் முதலில் திரும்புகிறானே அவனுக்குத்தான் மாம்பழம் கிடைக்கும்."

உடனே முருகன் தனது வாகனமாகிய மயிலில் ஏறிக்கொண்டு பறக்கிறான். தொந்திப் பிள்ளையாரோ சிறிது நேரம் யோசிக்கிறார். பிறகு பாமசிவனையும் பார்வதியையும் சுற்றுகிறார். "பழத்தை எனக்குக் கொடுங்கள்" என்று கேட்கிறார்.

"நீ உலகத்தைச் சுற்றினையா?" என்று கேட்கிறாள் பார்வதி.

"அம்மையே! அப்பா! நீங்கள் இருவரும்

தான் எல்லா உலகத்தையும் படைத்தீர்கள்.
எல்லா உலகமும் உங்களுக்குள்ளே அடக்கம்.
உங்களைச் சுற்றுவதும் உலகத்தைச்
சுற்றுவதும் ஒன்று தானே! உங்களைச் சுற்றினால்
உலகத்தைச் சுற்றின மாதிரி தானே?"
என்கிறார் பிள்ளையார்.

பாமதிவன் என்ன சொல்ல முடியும்?!
படத்தைப் பிள்ளையாருக்குக் கொடுத்துவிடுகிறார்.

28. கணவன் வந்தான்

அன்னம் ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் தன் கணவன் வருவதை எதிர்பார்த்தாளா? எதிர்பார்க்கிருக்க முடியாது. அவருடைய கணவன் ஒரு மாதமாய் வீட்டுக்கு வரவில்லை. பக்கத்து வீட்டுக்காரிகள் சாடைமாடையாய்ப் பேசினார்கள். அவன் வேறு ஒரு பெண்ணோடு வாழ்கிறான் என்று சொன்னார்கள். அன்னம் தன்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. தன் மகன் செல்வனைப் பற்றியும் கவலைப்படவில்லை. கணவனுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறதே என்றுதான் அவள் கவலைப்பட்டாள்.

செல்வனுக்கு ஐந்து வயது. அவன் தனியாகத் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தான். ஒரு பெண் அந்தத் தெரு வழியாக வந்தாள். அவளுக்குப் பதினைது வயதிருக்கலாம். அவள் செல்வனைப் பார்த்தாள். ஏனோ தயங்கி நின்றாள். சுற்றிலும் பார்த்தாள். தெருவில் அவனையும் செல்வனையும் தவிர வேறு யாரும் இல்லை. அவள் மறுபடியும் செல்வனை உற்றுப் பார்த்தாள். "கண்ணு! நீ உன் அப்பாவைப்போலவே இருக்கிறாயே!

உன் பெயர் என்ன?" என்றாள். அவன் "செல்வன்" என்றான். "இங்கே வா" என்று கூப்பிட்டாள். அவன் அவள் பக்கத்தில் வந்தான். அவள் சிறுவனை மார்போடு அணைத்துக்கொண்டாள்.

இதையெல்லாம் ஜன்னல் வழியாகப் பார்த்த அன்னம் அந்தப் பெண் யார் என்று புரிந்து கொண்டாள். அன்னம் வேகமாய்க் கொருவுக்குப் போனாள். அந்தப் பெண்ணையும் தன் மகனையும் சேர்த்துத் தழுவிக்கொண்டாள். அந்தப் பெண் திடுக்கிட்டாள்; தலை குனிந்து நின்றாள். அன்னம் அவளிடம், "என் பயப்படுகிறாய்? நீயும் திவனுக்குத் தாய் தானே!" என்றாள். அந்த இளம்பெண் தலை குனிந்தபடியே அங்கிருந்து போய்விட்டாள்.

அன்றைக்கு இரவில் அன்னத்தின் கணவன் வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டான்.

(அகநானூற்றுப் பாடல் ஒன்றின் தழுவல்)

29. நம்பிக்கை

துரியோதனனும் கர்ணனும் நெருங்கிய நண்பர்கள். துரியோதனனுக்குக் கர்ணனுடைய நல்ல குணம் தெரியும். ஆகவே தன்னுடைய அரண்மனையில் கர்ணனுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்தான். அந்தப் புரத்துக்குள்கூடக் கர்ணன் தாராளமாய்ப் போகலாம்.

கர்ணன் சிலசமயம் அந்தப்புரத்தில் துரியோதனனுடைய மனைவியுடன் பேசிக்கொண்டிருப்பான்; சில சமயம் அவளோடு சதுரங்கம் விளையாடுவான்.

ஒருநாள் கர்ணனும் துரியோதனனுடைய மனைவியும் சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஆட்டம் விருவிருப்பாய் இருந்தது. கர்ணன் அந்த ஆட்டத்தில் வெற்றி அடையலாம் என்று நினைத்தான். அப்போது துரியோதனன் அங்கே வந்தான். அவன் கர்ணனுக்குப் பின்பக்கத்தில் வந்து கொண்டிருந்தான். அது கர்ணனுக்குத் தெரியாது. மேலும் அவன் ஆட்டத்தில் மும்முரமாய் இருந்தானே! கர்ணனுக்கு எதிரே உட்கார்ந்திருந்த துரியோதனன் மனைவி

தின் கணவன் வருவதைப் பார்த்துவிட்டாள். கணவன் அறைக்குள் வந்தால் மனைவி உட்கார்ந்திருக்கக்கூடாது அல்லவா? அது மரியாதை கில்லையே! அவள் எழுந்தாள். "எங்கே எழுந்திருக்கிறாய்? தோற்கப் போகிறோமே என்று பயப்படுகிறாயா? ஆட்டம் முடிந்தால்தான் நீ எழுந்திருக்கலாம். உட்கார்" என்று கர்ணன் சொன்னான். அவள் உட்காரவில்லை. அவளுடைய மேகலையைப் பிடித்துக் கர்ணன் கோபமாக இழுத்தான். மேகலை ஒடிந்தது. அதிலிருந்து முத்துக்களும் மணிகளும் சிதறின.

"கவலைப்படாதே! நான் பொறுக்குகிறேன். நானே மேகலையில் கோத்து விடுகிறேன். ஆட்டத்தை முடித்துவிடு" என்று ஒரு குரல் கேட்டது. கர்ணன் திரும்பிப் பார்த்தான். துரியோதனன் நின்று கொண்டிருந்தான்! அவனுடைய மனைவியைக் கோபத்தோடு தொட்டிருக்கக்கூடாது என்று கர்ணன் திடீரென்று வருத்தப்பட்டான். ஆனால் காரியத்தையெல்லாம் பார்த்தும் துரியோதனனுக்குக் கோபம் வரவில்லையே! அவனுக்கு எவ்வளவு பெருந்தன்மை! அவனுக்குக் கர்ணன் மேல் எவ்வளவு நம்பிக்கை

உணர்ச்சி மிகுதியால் கர்ணன் பேச முடியவில்

48

(மூலம்: வில்லி பாரதம்)

30. விதி

தமிழ்நாட்டில் ஈரோடு என்ற ஊரில் ஒரு சிறிய தெரு. காலே மணி ஏழு. பெட்டிக்கடைக்காரன் கடையைத் திறந்தான். அதாவது பூட்டைத் திறந்தான். முன்பக்கம் கதவு போல அமைந்த பகுதியைத் தூக்கி, ஒரு கம்பினை முட்டுக் கொடுத்து, நிற்க வைத்தான். கடை திறந்தாயிற்று.

"ஓர் அணாவுக்கு வெற்றிலே கொடு, அப்பா" என்ற குரல் கேட்டது. கடைக்காரன் நிமிர்ந்து பார்த்தான். பஞ்சாங்க ஐயர் நின்று கொண்டிருந்தார். அவன் வெற்றிலையை எடுத்து ஐயருக்குக் கொடுத்தான்.

"என்ன அப்பா! காலே நேரத்திலே உன் முகத்தில் இப்படிச் சோகம் வழிகிறது!" என்றார் ஐயர்.

"வீட்டுக் கவலை தான், சாமி. கிராத்திரி பூராவும் என் பிள்ளை தூங்கவில்லே. உடம்பு நெருப்பாய்ச் சுட்டது. காலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போ என்று என் வீட்டுக்காரியிடம் சொல்லிவிட்டு வந்தேன்."

"கவலைப்படாதே! கவலைப்பட்டு என்ன ஆகப் போகிறது? எல்லாம் விதிப்படி தான் நடக்கும். 'அன்று எழுதின எழுத்தை அழித்து எழுத முடியுமா?' "

அப்போது தான் கடைக்கு வந்தான் ஒரு பையன். "அப்படியா, சாமி? எல்லாம் விதிப்படித் தான் நடக்குமா?" என்றான் அவன்.

"ஆமாமடா" என்றார் ஐயர்.

பையன் காலால் கம்பை ஒரு தட்டுத் தட்டிவிட்டான். பெட்டிக்கடைக் கதவு படாரென்று கீழே கிறங்கியது. கதவின் விளிம்பு ஐயரின் மண்டையில் வெட்டியது. இரத்தம் கொட்டிற்று. ஐயர் கூச்சல் போட்டார். கடைக்காரன் குதித்து வந்தான். பையன் ஓட்டம் எடுத்தான். சிறிது நேரத்தில் கடைக்காரன் பையனைப் பிடித்து விட்டான்; பையனை இழுத்துக் கொண்டு வந்து ஐயருக்கு முன்னாலே நிறுத்தினான்.

ஒரு கூட்டம் கூடிவிட்டது.

"பாவி! சண்டாளா!" என்று ஐயர் திட்ட ஆரம்பித்தார்.

"என்ன சாமி! எல்லாமே விதிப்படி தான் நடக்கும் என்று சொன்னீர்களே! இன்றைக்கு நீங்கள் காயப்பட வேண்டும் என்பது உங்கள் விதி!" என்றான் பையன்.

"வாய்க் கொழுப்பைப் பார்! இன்றைக்கு நீ செம்மையாக அடிக்கப்பட வேண்டும் என்பது உன் தலைவிதி" என்று கடைக்காரன் கையை ஓங்கினான்.



கூட்டத்தில் ஒருவன், "அடடே! வேங்கடசாமி நாயக்கர் பையனு?" என்றான். நாயக்கர் அந்த வட்டாரத்தில் செல்வாக்கு உடையவர். பையன் அடி படாமல் தப்பினான்.

ஐயர் முனகிக் கொண்டே ஆஸ்பத்திரியைப் பார்த்துப் போனார்.

ஈ. வே. ராமசாமி நாயக்கர் என்ற அந்தப் பையன் பிற்காலத்தில் சுயமரியாதை இயக்கத்தின் தலைவராய்த் தமிழ்நாட்டில் பிராமணரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினான்.

31. "சுங்கரா! சுங்கரா!"

அந்தப் பல்கலைக்கழகத்துக் தமிழ்த் துறையில் ஒரு பேராசிரியரும் ஐந்து விரிவுரையாளர்களும் உண்டு. ராமசாமி ஒரு விரிவுரையாளர். அன்றைக்கு அவர் ஒரு வகுப்பு நடத்த வேண்டும். 'சாக் பீ'சைத் தேடினார். ஆசிரியர்கள் அறையில் 'சாக்பீஸ்' பெட்டி காலி. "சுங்கரா!" என்று கத்தினார். சுங்கான் என்பது தமிழ்த்துறைச் சேவகனுடைய பெயர். ராமசாமி பல தடவை கத்தினார். சுங்கான் வரவில்லை.

"பாருங்கள், சார்! நான் எத்தனை தடவை கத்தினேன்! சுங்கான் எங்கே போனான்?" என்று ராமசாமி சொன்னார்.

"யாருக்குத் தெரியும்! எனக்கு ஒரே தாகம். பானையில் ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லை. சுங்கான் இன்னைக்குத் தண்ணீர் வைக்கவில்லை" என்று சொன்னார் வைத்திலிங்கம்.

"நாம் அவனைச் சும்மா விடக்கூடாது. போராசிரியரிடம் புகார் செய்ய வேண்டும். பாவமாகம் சார்! நீங்கள் தான் 'சீனியர்'. நீங்கள் தான் பேராசிரியரிடம் சொல்ல

வேண்டும்" என்று சொன்னார் அண்ணாமலை.

"சரி" என்று சொன்னார் பூவாராகம்.

பிற்பகலில் அவர் போதிரியருடைய அறைக்குப் போனார். "சார்! எங்களுக்கு எல்லாம் ஒரு குறை. சங்கானை நீங்கள் கண்டிக்க வேண்டும். அவன் ஒரு வேலையும் செய்வதில்லை" என்று சொன்னார்.

"ஆமாம். 'பட்ட'லில் சாப்பாடு வாங்கிக் கொண்டுவா என்று சொன்னேன். அவன் பன்னிரண்டு மணிக்குப் போனவன். இப்போது மணி மூன்று. அவனை எங்கே காணேம்? நான் 'சங்கரா! சங்கரா!' என்று எத்தனை தடவை கூப்பிட்டாலும் அவன் இன்னும் வரவில்லை" என்று போதிரியர் சொன்னார்.

"அடடா! ... சார்! வேலை ஒழுங்காய்ச் செய்யாவிட்டால் அவனை 'டிஸ்மிஸ்' செய்யுங்கள்!"

"அதுமட்டும் என்னால் முடியாது. என் வயது அறுபது. உங்களுக்குத் தெரியுமே! என்றைக்கும் எனக்குச் சாவு வரலாம். இந்தச் சமயத்தில் நான் கடவுளுடைய பெயரை அடிக்கடி சொல்ல வேண்டாமா? சங்கரன் இல்லாவிட்டால் நான் எப்படி

அடிக்கடி கடவுள் பெயரைக் கூப்பிட முடியும்?"

பூவாராகம் என்ன பதில் சொல்ல முடியும்?

32. "ஐயோ!"

சேகரன் ஒரு நாள் தன் அக்கை வீட்டுக்குப் போனான். மருமகனுக்காக அவள் ஒரு தின்பண்டம் செய்தாள். அத்தை செய்த பண்டத்தை அவன் தின்று பார்த்தான். அது ருசியாய் இருந்தது.

"அக்கை! இந்தப் பண்டத்துக்கு என்ன பெயர்?" என்று கேட்டான், சேகரன்.

"கொழுக்கட்டை" என்றாள் அவள்.

சேகரன் புறப்பட்டான். வழியெல்லாம் கொழுக்கட்டையை நினைத்துக்கொண்டே நடந்தான். 'மனைவியிடம் சொல்லவேண்டும். அவள் கொழுக்கட்டை செய்யட்டும்' என்று அவன் நினைத்தான். அவன் நடந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு பெரிய மரம். அதிலிருந்து ஒரு நிழை முறிந்து விழுந்தது. "ஐயோ" என்று கத்திக்கொண்டே சேகரன் விழுந்தான். அவனுக்கு மயக்கம் வந்து-விட்டது. கொஞ்சநேரத்தில் மயக்கம் தெளிந்-தது. அவனுடைய உடம்பில் காயம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் அவனுக்குத் தின்-பண்டத்தினுடைய பெயர் மறந்துபோயிற்று. "ஐயோ" என்பது தான் நினைவு இருந்தது. "ஐயோ,

ஐயோ" என்று சொல்லிக்கொண்டே வீட்டுக்கு வந்தான்.

சேகரன் மனைவியிடம் "எனக்கு ஐயோ வேண்டும். செய்து கொடு" என்றான்.

அவள், "ஐயோ என்றால் என்ன? அதை எப்படிச் செய்வது?" என்று கேட்டாள்.

"இந்தப் பண்டம் உனக்குத் தெரியாதா? என்னை எமாற்றப் பார்க்கிறாயா?" என்று சொல்லிச் சேகரன் மனைவியை அடித்தான்.

அவள் "ஐயோ! ஐயோ!" என்று அலறினாள்.

அவன் "அதுதான்! அதுதான்!" என்றான்.

கூச்சலைக் கேட்டுப் பக்கத்து வீட்டுக்-காரி வந்தாள். அவள் சேகரனிடம், "மனைவியை இப்படியா அடிப்பது? இவள் உடம்பு எல்லாம் கொழுக்கட்டை போல வீங்கி விட்டதே!" என்றாள்.

"ஆகா! அதுதான் பண்டத்தின் பெயர்" என்றான் சேகரன்.

"இதை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா?" என்றாள் மனைவி.

(நாடோடிக் கதை)

33. நூறு வடை

முத்தையா ஓர் எளை. காயம்மாள் அவனுடைய மனைவி. முத்தையாவுக்கு வடை மிகவும் பிடிக்கும்.

"வடை சுடேன்" என்று அவன் அடிக்கடி மனைவியிடம் சொல்வான்.

"உங்களுக்கு வடை வேண்டுமா?! வடை சுடப் பருப்பு, எண்ணெய் எல்லாம் வேண்டும். இந்தச் சாமான்களை வாங்கப் பணம் வேண்டுமே! நம்மிடம் பணம் இல்லையே!" என்று அவள் முணுமுணுப்பாள்.

ஒரு நாள் முத்தையா கடைத்தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தான். ஒரு கடைக்காரர் தண்ணீர் குடிக்க உள்ளே போனார். முன்பக்கம் யாரும் இல்லை. பணப்பெட்டியை அவர் பூட்டவில்லை. அந்த நேரத்தில் அவ்வழியாக வந்த ஒரு திருடன் இதைப் பார்த்துவிட்டான். பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்தான். இதையெல்லாம் பார்த்த முத்தையா, "திருடன்! திருடன்!" என்று சத்தம் போட்டான். ஓடிப் போய்த் திருடனைப் பிடித்துக் கொண்டான். கடைக்காரர் உள்ளேயிருந்து வெளியே ஓடி

வந்தார். அதே சமயத்தில் போலீஸ்காரர்களும் வந்தார்கள். அவர்கள் திருடனைப் பிடித்துக் கொண்டுபோனார்கள்.

"முத்தையா! நீதான் என் பணத்தைக் காப்பாற்றினாய். உனக்கு என்ன வேண்டும்? கேள். தருகிறேன்" என்றார் கடைக்காரர்.

"எனக்கு ரொம்ப நாளாக வடை வேண்டும் என்று ஆசை. பருப்பு, எண்ணெய் எல்லாம் கொடுங்கள்" என்றான் முத்தையா.

வடைக்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் கடைக்காரர் கொடுத்தார். முத்தையா வீட்டுக்கு வந்தான். "இதோ! சாமான்கள்! எனக்கு நூறுவடை வேண்டும். சுட்டுக் கொடு" என்று காயம்மாளிடம் சொன்னான்.

காயம்மாள் வடை சுட்டாள். அவளுக்கும் வடை மிகவும் பிடிக்கும். சட்டியிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்த உடனேயே அவள் வடையைத் தின்றாள். இப்படி தொண்ணூற்று ஒன்பது வடைகளைத் தின்று விட்டாள். நூறாவது வடையையாவது முத்தையாவிடம் கொடுக்கக் கையை நீட்டினாள்.

"எனக்கு ஒரு வடைதானு? நூறு வடை கேட்டேனே!" என்றான் முத்தையா.

"மத்தவையெல்லாம் நான் தின்று விட்டேன்" என்றாள் அவள்.

"தொண்ணூற்றென்பது இருந்திருக்குமே! அத்தனையும் நீ எப்படித் தின்றாய்?"

"இப்படித்தான்" என்று சொல்லிக் கொண்டே அவள் நூறுவது வடையையும் தின்று விட்டாள்.

(நாடோடிக் கதை)

34. ஊமைக் கதை

ங்கன் ஒரு வீட்டில் குடியிருந்தான். அடுத்த வீட்டில் ராஜையா குடியிருந்தான். ங்கனிடம் ஒரு கானுமாடு இருந்தது. ராஜையாவிடமும் ஒரு கானுமாடு இருந்தது. ங்கன் வீட்டுக்கு முன்னே ஒரு வேப்பமரம் நின்றது. ராஜையா வீட்டுக்கு முன்னே ஒரு விளக்குத்தூண் நின்றது. ஒருநாள் ங்கன் தன் மாட்டை அந்த வேப்பமரத்தில் கட்டினான். அப்போது ராஜையா தன் மாட்டை ஓட்டிக் கொண்டு வந்தான்; அந்த மாட்டை விளக்குத் தூணில் கட்டப் போனான். ங்கன் அவனிடம், "என் மாடு முரட்டு மாடு. இது உன் மாட்டை முட்டிக் கொன்று விடும். இதற்குப் பக்கத்தில் உன் மாட்டைக் கட்டாதே" என்று சொன்னான். ராஜையா அதைக் கவனிக்காதவன் மாதிரித், தன் மாட்டை விளக்குத் தூணில் கட்டினான். இரண்டு பேரும் வீட்டுக்குள்ளே போய்விட்டார்கள். அவர்கள் வெளியே வந்தபோது ராஜையாவின் மாடு ரத்தவெள்ளத்தில் கிடந்தது. ங்கனுடைய மாட்டின் கொம்பெல்லாம் ரத்தம்.

"உன் மாடுதான் என் மாட்டைக் குத்திக்

கொன்று விட்டது. நீ எனக்கு கூடிடனடு தாவேண்டும்" என்றான் ராஜையா.

"என்மாடு மூட்டு மாடு என்று நான் எச்சரிக்கேன். நீ கேட்கவில்லை. என்மேல் தப்பு இல்லை" என்றான் நந்தன்.

"நீதிபதியிடம் வா" என்று ராஜையா நீதிபதியிடம் நந்தனை இழுத்துக்கொண்டு போனான். ராஜையா தன் கட்சியைச்சொன்றன். நீதிபதி நந்தனை விசாரிக்க ஆரம்பித்தார். நந்தன் வாயைத் திறக்காமல் மௌனமையப் போல நின்றான். "இந்த மௌனமையை எப்படி விசாரிக்க முடியும்" என்றார் நீதிபதி. "இவன் இப்போது மௌனமபோல நடிக்கிறானே! நான் விளக்குத் தூணில் மாட்டைக் கட்டப் போன போது கட்டாதே என்று சொன்னான்" என்றான் ராஜையா.

"அவன் கட்டாதே என்று சொன்னனா? அப்படி என்றால் நீ என் கட்டினாய்? உன்மேல் தான் தப்பு. உனக்கு அவன் கூடிடனடு கொடுக்க வேண்டியது இல்லை" என்று நீதிபதி சொல்லிவிட்டார்.

"ராஜையாவிடமிருந்தே உண்மையை வாவழைக்கத்தான் நான் மௌனமயானேன்" என்றான் நந்தன்.

(நாடோடிக் கதை)

35. வேலைக்காரன் செய்த வேலை

பக்கத்து ஊரில் மாட்டுச் சந்தை கூடுகிறது. செட்டியார் ஒரு பசு வாங்க வேண்டும் என்று விரும்பினார். தனியே பக்கத்து ஊருக்குப் போக அவருக்குப் பயம். காட்டு வழியாகப் போகவேண்டுமே! அவருடைய வேலைக்காரன் சிவத்தையா ஓர் அப்பாவி. என்ன வேலை சொன்னாலும் அவன் செய்வான். செட்டியார் அவனிடம், "நீ என்னோடு பக்கத்து ஊருக்கு வருகிறாயா? உனக்கு ஐந்து ரூபாய் தருகிறேன்" என்றார். அவன் "சரி" என்றான்.

செட்டியாரும் சிவத்தையாவும் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். தூரத்தில் கூச்சல் கேட்டது. கொள்ளைக்காரர்கள் வருகிறார்கள் என்று செட்டியார் புரிந்து கொண்டார். அவர்களிடமிருந்து எப்படித் தப்புவது? செட்டியார் யோசித்தார். "சிவத்தையா! நீ இந்த மரத்தடியில் படுத்துக்கொள். அசையாதே! கண்ணைத் திறக்காதே! பிணம் என்று நினைத்துக் கொள்ளைக்காரர்கள் உன்னை ஒன்றும் செய்யமாட்டார்கள்" என்றார். சிவத்தையா

அப்படியே படுத்துக் கொண்டான். செட்டியார் கின்னொரு மாத்தடியில் படுத்துக்கொண்டார்.

கொள்ளைக்காரர்கள் வந்தார்கள். சிவத்தையா படுத்துக் கிடப்பதைப் பார்த்தார்கள். ஒரு கொள்ளைக்காரன் சிவத்தையாவின் விலாவில் ஓர் உதை கொடுத்தான். அப்போதும் சிவத்தையா அசையவில்லை. "செத்த பிணம்" என்றான் கொள்ளைக்காரன்.

"நான் பிணமா? பிணம் எங்கேயாவது ஐந்து ரூபாயை மடியில் கட்டிக் கொண்டிருக்குமா?" என்றான் சிவத்தையா.

கொள்ளைக்காரர்கள் அவனுடைய மடியிலிருந்து ஐந்து ரூபாயை எடுத்துக் கொண்டார்கள். "அட! இந்த 'கோட்டு' அழுக்காய் இருக்கிறதே! இது செல்லுமா?" என்றான் ஒரு கொள்ளைக்காரன்.

சிவத்தையா "ஏன் செல்லாது? இது செட்டியார் கொடுத்தது. இது செல்லாது என்றால், அவர் மடியில் இருக்கிற ஆயிரம் ரூபாயும் செல்லாது" என்றான்.

கொள்ளைக்காரர்கள் செட்டியாரிடமிருந்த ஆயிரம் ரூபாயையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

(நாடோடிக் கதை)

36. தாகம்

அவனுக்கு வருத்தமும் குழப்பமும் ஏற்-
பட்டன. அவன் தன் காதலியைப் பார்த்து
நான்கு நாட்கள் ஆயிற்று. அதுதான் அவ-
னுடைய வருத்தத்துக்கும் குழப்பத்துக்கும்
காரணம். நான்குநாட்களுக்கு முன் வரை
அவர்கள் தினந்தோறும் சந்தித்துவந்தார்கள்.

அவனுக்கும் அவளுக்கும் நெடுநாள்
உறவு. அவர்கள் இருவரும் சிறுபிள்ளைகளாய்
இருந்த காலத்திலேயே பழக்கம் ஏற்பட்டது.
அவள் தெருமணலில் வீடுகட்டி விளையாடுவாள்.
அவன் அந்த வழியாக வருவான். "என்னையும்
விளையாட்டில் சேர்த்துக்கொள்" என்று
சொல்வான். அவள் "மாட்டேன்" என்பாள்.
அவள் ஆசையோடு கட்டின வீட்டை அவன்
தன் காலால் சிதைப்பான். சிலசமயம்
அவள் பந்து விளையாடுவாள். அவன் பந்தை
எடுத்துக்கொண்டு ஓடிவிடுவான். இப்படித் தொடங்கிய
அவர்களுடைய நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.
இருவரும் இளம்பருவத்தை அடைந்தார்கள்.
அவர்கள் தனிமையில் சந்திக்கார்கள்.
தங்கள் சந்திப்பு மற்றவர்களுக்குத்
தெரியாது என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் எப்படியோ அவருடைய அம்மாவுக்குத்
தெரிந்துவிட்டது. பெற்றவள் சும்மா
இருப்பாளா? "வீட்டைவிட்டு வெளியே போகக்
கூடாது" என்று மகனைக் கட்டுப்படுத்தினாள்.
அதனால்தான் அவள் அவனைச் சந்திக்க
முடியவில்லை.

அவன் அவளைச் சந்திக்கத்துடித்தான்.
அவளுடைய வீட்டுக்கு முன்னால் நின்றான்.
"அம்மா! தாயே! தாகமாய் இருக்கிறது.
கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்" என்று
சொன்னான். அம்மா சமைத்துக்கொண்டிருந்-
தாள். வெளியே நிற்பவன் யார் என்று
அவளுக்குத் தெரியாது. "பாவம்! செம்பில்
தண்ணீர் கொண்டுபோ! அவனுடைய கையில்
ஊற்றிவிட்டு வா" என்று மகனிடம் சொன்னாள்.

மகள் வாசலுக்கு வந்ததும் காதலனைப்
பார்த்தாள். அவளுக்கு மகிழ்ச்சியும் பயமும்
ஏற்பட்டன. அவள் தன் மனத்தைக் கட்டுப்-
படுத்திக் கொண்டாள். "கையை நீட்டு. தண்ணீர்
ஊற்றுகிறேன்" என்று சொன்னாள். அவன்
அவளுடைய கைகளைப் பிடித்தான். அவனுடைய
பிடியில் கண்ணாடிவளையல் உடைந்தது.
உடைந்த துண்டு அவளுடைய கையைக்
குத்திற்று. அவள் "அம்மா" என்று அலறி.

னுள். தாய் பதறி வாசலுக்கு ஓடி வந்தாள். "என்ன நடந்தது?" என்று கேட்டாள். மகள் சமாளித்துக் கொண்டாள். "தண்ணீர் குடிக்கும் போது திவனுக்கு விக்கல் எடுக்கிறது" என்று சொன்னாள். "விக்கல் எடுத்தால் முதுகைத் தடவி விட வேண்டும். அதனால் என்ன பயன்?" என்று தாய் சொன்னாள். தாய் அவளுடைய முதுகைத் தடவிவிடத் தொடங்கினாள். அவன் சிரித்தான். தன் காதலியைக் கடைக்கண்ணால் பார்த்தான். #CN# அந்தப் பார்வை அவனைக் கொன்றுவிடும் போல் இருந்தது.

(மூலம்: கலித்தொகை-குறிஞ்சி-15)

37. ஜம்புலிங்கம்

கந்தனுக்கும் வள்ளிக்கும் அன்றைக்குக் காலையில்தான் திருமணம் நடந்தது. அவன் அவளோடு மாட்டு வண்டியில் தன்னுடைய கிராமத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். உச்சி வெயிலில் அந்த வண்டி மட்டும் தனியே காட்டுப் பாதையில் ஓடிக்கொண்டிருந்தது.

திடீரென்று வண்டி நின்றது. அது வரை வள்ளியோடு சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான் கந்தன். இப்போது முன்புறம் பார்த்தான். வண்டிக்கு முன்னே ஜம்புலிங்கம் நின்றுகொண்டிருந்தான். ஜம்புலிங்கம் திருநெல்வேலி மாவட்டத்திலேயே மிகப் பெரிய கொள்ளைக்காரன். அவனுடைய பெயரைக் கேட்டால் அழுகிற குழந்தை கூட வாயை மூடிக்கொள்ளும். அவன் அவ்வளவு பயங்கரமானவன். கந்தனின் உடம்பு நடுங்கியது. நல்ல வேளையாக வள்ளி ஜம்புலிங்கத்தைப் பார்க்கவில்லை. வண்டிக்காரனுடைய முதுகு அவனை மறைத்தது.

"ஜம்புலிங்கம் வண்டிக்காரனிடம் கீழே இறங்கு" என்றான். வண்டிக்காரன் "ஏன்?" என்றான். ஜம்புலிங்கம் வானை உருவினான்.



ஒரே வெட்டில் வண்டிக்காரனின் தலை தெருவில் விழுந்து உருண்டது. கிரக்கம் உறைந்ததுபோலப் பாய்ந்தது.

கந்தன் வள்ளியிடம், "இதோ வந்து விட்டேன்" என்று சொன்னான். உடனே வண்டியின் பின்புறம் குதிக்கான், திரும்பிப் பார்க்காமல் ஓடினான்.

ஜம்புலிங்கம் அவனை விரட்டிப் பிடிக்க முயலவில்லை. சிரித்துக்கொண்டே வண்டியின் பின்புறம் வந்தான். "தங்கச்சி, உன் நகைகளை யெல்லாம் கழற்று" என்று வள்ளியிடம் சொன்னான். வள்ளி மறுபேச்சில்லாமல் நகைகளைக் கழற்றிக் கொடுத்தாள்.

"தாலியை மறந்துவிட்டாயே!" என்றான் ஜம்புலிங்கம்.

"அண்ணா! ஒரு பெண்ணுக்குத் தாலி புனிதமானது ஆயிற்றே! கணவன் உயிரோடிருக்கும் போது, ஒரு பெண் தாலியைக் கழற்றலாமா? பாபம் அல்லவா?" என்றான் வள்ளி.

"தாலி கட்டினவன் மனைவியைக் காப்பாற்ற வேண்டும். உன் கணவனே தன் உயிரைக் காப்பாற்ற ஓடிப்போய்விட்டான். அவன் கட்டின தாலி எதற்கு?.... கோரமாகிறது. கழற்று."

வள்ளி அழுதுகொண்டே தாலியைக்.

கழற்றிக் கொடுத்தாள். ஜம்புலிங்கம் காலியை வாங்கிக் கொண்டு, மற்ற சுகைகளை எல்லாம் அவளிடமே திருப்பிக் கொடுத்துவிட்டான்.

திடீரென்று வந்தது போலவே, அவன் திடீரென்று போய்விட்டான்.

38. வாய் உள்ள பிள்ளை

பொன்னன் மதுரைக்குப் போய்க்-கொண்டிருந்தான். அவன் ஏழை. மேலும் அந்தக் காலத்தில் ரயிலோ பஸ்ஸோ கிடையாது. அவன் நடந்துதான் போய்க்-கொண்டிருந்தான். ஊருக்கு வெளியே ஒரு தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் ரோஜாப்பூக்கள் ஏராளமாய் இருந்தன. அவனுக்கு ஆசை வந்தது. தோட்டத்துக்-குள் போய்ப் பூக்களைப் பறிக்க ஆரம்பித்தான். அப்போது அங்கே இரண்டு சேவகர்கள் வந்தார்கள். பொன்னனைப் பிடித்துக் கொண்டார்கள்.

"நான் என்ன தப்புச் செய்தேன்?" என்றான் பொன்னன்.

ஒரு சேவகன் "இது பாண்டிய ராஜா-வுக்குச் சொந்தமான தோட்டம்" என்றான்.

"எனக்குத் தெரியாது. நான் வெளி-யூர்க்காரன். இப்போதுதான் முதல் தடவை-யாக மதுரைக்கு வருகிறேன்."

"இந்தத் தோட்டம் உனக்குச் சொந்த-மா? நீ என் தோட்டத்துக்குள் வந்தாய்?"

"தோட்டம் எனக்குச் சொந்தம் இல்லை

என்பது உண்மைதான். ஆனால் இங்கே
தகவும் இல்லை; காவலும் இல்லையே!"

"நாங்கள் இருக்கிறோமே! நீ கோட்டக்-
குக்குள் நுழைந்தது ஒரு குற்றம். பூக்களைப்
பறித்தது பெரிய குற்றம். இந்தப் பூக்கள்
எல்லாம் பாண்டியராணிக்காகவே பூத்திருக்-
கின்றன."

சேவகர்கள் பொன்னனை இழுத்துக்
கொண்டு நடந்தார்கள். பொன்னன் பறித்த
பூக்களை அவனே தூக்கிக்கொண்டு நடந்-
தான். வழியில் ஒரு சாமியார் வந்தார்.
சேவகர்களும் பொன்னனும் அவரைக்
கும்பிட்டார்கள். சாமியார் நிலைமையைப்
புரிந்துகொண்டார். "வாய் உள்ள பிள்ளை
பிழைக்கும்" என்று சொல்லிவிட்டுப் போய்-
விட்டார். புத்திசாலியான பொன்னன்
கொஞ்ச நேரம் யோசித்தான். பிறகு அவன்
ஒவ்வொரு ரோஜாவாக எடுத்துத் தின்ன
ஆரம்பித்தான். கொஞ்ச நேரத்தில் ரோஜாக்-
கள் எல்லாம் அவனுடைய வயிற்றுக்குள்
போய்விட்டன.

திருட்டை நிரூபிக்க வழியில்லை என்று
உணர்ந்த சேவகர்கள் பொன்னனை விட்டு-
விட்டார்கள்.

(நாடோடிக் கதை)

39. ஓர் அரசனின் வருத்தம்

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான்.
அவனுடைய பெயர் பத்திரகிரி. ஒரு நாள்
ஒரு முனிவர் வந்தார். அவர் பத்திரகிரியிடம்
ஒரு மாதுளம் பழத்தைக் கொடுத்தார்.
"இந்தப் பழத்தைச் சாப்பிடு. நீ என்னைக்-
கும் பதினாறு வயதுடன் இருப்பாய்" என்று
சொன்னார். முனிவர் போய்விட்டார்.

பத்திரகிரிக்கு முந்நூறு மனைவிமார்
உண்டு. மோகனாங்கி என்பவள் முதல் மனைவியாய்
இருந்தாள். பத்திரகிரி மோகனாங்கியிடம்
மாதுளம் பழத்தைக் கொடுத்தான். "இந்தப்
பழத்தைச் சாப்பிட்டால் நீ என்றைக்கும்
பதினாறு வயதுடன் இருப்பாய். ஒரு நல்ல
நாள் வரட்டும். அன்றைக்கு நீ இந்தப்
பழத்தைச் சாப்பிடலாம். அதுவரை நீ
இதைப் பத்திரமாய் வைத்திரு" என்று
சொன்னான். அவள் "சரி" என்றாள்.

அரண்மனையில் ஒரு குதிரைக்காரன்
இருந்தான். மோகனாங்கி அவனைக் காதலித்-
தாள். அவள் அவனிடம் அந்தப் பழத்தைக்
கொடுத்தாள். அந்தக் குதிரைக்காரனுக்கு
வேறு ஒரு காதலி உண்டு. அவள் அரண்மனையில்

வேலைக்காரியாய் இருந்தாள். அவன் அவ-
ளுக்கு அந்தப் பழத்தைக் கொடுத்தான்.
அவள் பழத்தைத் தன் கூடையில் வைத்துக்
கொண்டு நடந்தாள்.

பத்திரகிரி உப்பரிகையில் நின்று
கொண்டிருந்தான். வேலைக்காரியினுடைய
கூடையில் இருந்த மாதுளம் பழத்தை
அவன் பார்த்துவிட்டான். "அந்த வேலைக்-
காரியை இங்கே கொண்டு வாருங்கள்"
என்று சேவகர்களை அனுப்பினான். அவள்
வந்தாள். "உனக்கு இந்தப்பழம் எப்படிக்
கிடைத்தது? உண்மையைச் சொல்" என்று
பத்திரகிரி கேட்டான். அவள், "குதிரைக்
காரன் எனக்குக் கொடுத்தான்" என்று
சொன்னாள். சேவகர்கள் குதிரைக்காரனை
அழைத்து வந்தார்கள். "உனக்கு இந்தப்
பழம் எப்படிக் கிடைத்தது? உண்மையைச்
சொல்" என்று பத்திரகிரி கேட்டான்.
குதிரைக்காரன் "மோகனாங்கி எனக்குக்
கொடுத்தாள்" என்று சொன்னான். பத்திரகிரி
மோகனாங்கியை அழைத்துக் கேட்டான்.
அவள் ஒப்புக்கொண்டாள். பத்திரகிரி
விரும்பியிருந்தால் அவளையும் குதிரைக்-
காரனையும் கொன்றிருக்க முடியும். ஆனால்

அவன் யோசித்துப் பார்த்தான்: 'இந்தத் துரோகம்
செய்தவள் என் மனைவிகளில் ஒருத்தி தான்.
அவளைத் தவிர எனக்கு இன்னும் இருநூற்றுத்
தொண்ணூற்று ஒன்பது மனைவிமார் இருக்கி-
றார்களே! அவர்களில் யார் யார்
என்ன துரோகம் செய்திருப்பார்களோ?'
என்று வருத்தப்பட்டான். இப்படி
வருத்தத்தோடு யோசித்துக்கொண்டிருந்ததால்
தண்டனை கொடுப்பதையும் பழி வாங்குவதையும்
பற்றி அவனுக்கு மறந்து போயிற்று.
அவன் அப்போதே துறவியாகி அரண்மனை-
யையும் ஊரையும் விட்டுக் காட்டுக்குள்ளே
போய் மறைந்து விட்டான்.

(மூலம்: "விக்கிரமாதித்தன் கதைகளில் ஒன்று)

40. அன்பைக் கெடுத்தவன்

ஒரு வீட்டில் ஒரு பிராமணனும் அவனுடைய மனைவியும் குடியிருந்தார்கள். அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் உயிரையே வைத்திருந்தார்கள். ஒருநாள் இரவு பிராமணன் சாப்பிட உட்கார்ந்தான். மனைவி அவனுக்குச் சாதம் படைத்தாள். சாதம் சூடாய் இருந்ததால் அவன் சாப்பிடும்போது விசிறிகொண்டு வீசினாள்.

அந்த நேரத்தில் திண்ணையில் வந்து உட்கார்ந்தான் ஒருவன். பிராமணனும் அவனுடைய மனைவியும் அன்பாக இருப்பதைப் பார்த்தான். வந்தவனுடைய மனைவியோ பொல்லாதவள். அதனால் அவனுக்குப் பொறுமை வந்தது. பிராமணனுக்கும் அவனுடைய மனைவிக்கும் இடையே சண்டை மூட்டிவிட வேண்டும் என்று அவன் நினைத்தான். ஒருவர் மேல் ஒருவர் சந்தேகப்படுவதற்கு ஒரு சூழ்ச்சி செய்தான்.

திண்ணையிலிருந்து "சம்போ மகாதேவா" என்ற ஒரு குரல் கேட்டது. "யாரோ ஒரு சாமியார் வந்திருக்கிறார். நான் அவரை நமஸ்கரித்து விட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப்

பிராமணனுடைய மனைவி வெளியே வந்தாள். 'சாமியார்'ரைக் கும்பிட்டாள்.

"பெண்ணே! உன்னிடம் ஒரு ரகசியம் சொல்லப் போகிறேன். ரகசியத்தைக் காப்பாற்றுவாயா?" என்று கேட்டார் சாமியார்.

"காப்பாற்றுகிறேன்"

"உன் புருஷன் போன ஜன்மத்தில் உப்பு வியாபாரியாய் இருந்தவன். உனக்குச் சந்தேகமாய் இருக்கிறதா? அவன் தூங்கும் போது அவனுடைய காலை நக்கிப் பார்."

சாப்பிட்டுவிட்டுப் பிராமணன் வெளியே வந்தான். "சுவாமி! நமஸ்காரம்" என்றான். அவனுடைய மனைவி வீட்டுக்குள்ளே போய்விட்டாள்.

"உன்னிடம் ஒரு ரகசியம் சொல்லப் போகிறேன். உன் மனைவி..."

"அவளுக்கு என்ன?"

"அவள் போன ஜன்மத்தில் ஒரு நாயாக இருந்தாள். இப்போதும் அந்தக் குணம் அவளிடம் இருக்கிறது. உனக்குச் சந்தேகமாக இருக்கிறதா? இன்றைக்கு இரவு நீ தூங்குவது போலப் படுத்திரு. அவள் உன் காலை நக்குவாள். நீ தெரிந்துகொள்ளலாம்."

பிராமணன் அன்றிரவு படுக்கையில்

படுத்தான். படுத்ததும் கண்ணை மூடிக்கொண்டான். பத்து நிமிடம் கழிந்தது. பிறகு அவனுடைய மனைவி சத்தம்போடாமல் எழுந்தாள். மெல்லத் தவழ்ந்து போய்க் கணவனுடைய காலை நக்கினாள். "தூ! உப்புக் கரிக்கிறது" என்று வெறுப்போடு சொன்னாள்.

"நாயே!" என்று கத்திக்கொண்டு எழுந்திருந்தான் பிராமணன்.

இரண்டு பேருக்கும் வாய்ச்சண்டை ஏற்பட்டது. பிறகு பிராமணன் மனைவியை அடித்து வாய்ச்சண்டை கைச்சண்டை ஆயிற்று. வலி தாங்க முடியாததனால் அவள் அலறி அழுதாள். மனைவி அதிகமாக அலறப் பிராமணன் அதிகமாக ஓங்கி அடித்தான்.

திண்ணையிலிருந்து இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த 'சாமியார்' சிரித்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தார்.

(நாடோடிக் கதை)

41. துறவு

ஓர் ஊரில் ஒரு சாமியார் இருந்தார். அவருக்கு வீடுவாசல், மனைவிமக்கள் என்றும் இல்லை. பசித்தால் ஊரில் பிச்சை எடுப்பார். மற்ற நேரமெல்லாம் தியானம், பஜனை ஏதாவது செய்வார்.

அவருடைய ஆடை கோவணம். இரண்டே இரண்டு கோவணம்தான் அவரிடம் உண்டு. ஒன்றை அணிவார்; மற்றதைத் துவைத்துக் காயப்போட்டிருப்பார்.

ஒரு நாள் காலையில் சாமியார் குளித்துவிட்டு வந்தார். கோவணத்தை மாற்ற நினைத்தார். முதல்நாள் காயப் போட்டிருந்த கோவணத்தை எடுத்தார். அதை எலி கடித்திருந்தது. எலியை ஒழிப்பதற்காகச் சாமியார் ஒரு பூனையை வளர்த்தார். பூனைக்குத் தினமும் பால் கொடுக்கவிரும்பினர். ஊர் மக்கள் சாமியாருக்கு ஒழுங்காய்ச் சாப்பாடு கொடுப்பார்கள்; சாமியாருடைய பூனைக்குமா பால் கொடுப்பார்கள்? சாமியார் யோசித்தார். பாலுக்காக ஒரு பசுவை வாங்கினார். காலையிலும் மாலையிலும் அவரே பால் கறந்து பூனைக்குக் கொடுத்தார். பசுவுக்குப் புல் கொண்டு வருவது, அதைக் குளிப்பாட்டுவது முதலிய வேலைகளையும்

சாமியாரே செய்தார். கிப்போது அவருக்குத் தியானத்துக்கு நேரமே கிடைக்கவில்லை. அவர் யோசித்துப் பார்த்துவிட்டு, ஒரு வேலைக்காரனை அமர்த்தினார். பசுவின் பொறுப்பினை அவனிடம் ஒப்படைத்து வைத்தார்.

ஒரு வாரம் கழிந்தது. வேலைக்காரன் ஒழுங்காய் வேலை செய்வதில்லை. சில நாள் வருவான்; சில நாள் வரமாட்டான். என்ன செய்வது என்று சாமியார் யோசித்துப் பார்த்தார். வேலைக்காரனை மேற்பார்க்க வேண்டும்; அவன் வராத நாளில் அவனுடைய வேலைகளைச் செய்ய வேண்டும். கிதற்கு என்ன வழி? சாமியார் ஒரு பெண்ணைப்பார்த்து, மணந்துகொண்டார்.

ஒரு நாளிரவு. முழு நிலா. சாமியார் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். அவருடைய மனைவி அழுதுகொண்டே வந்தாள். "எப்பொழுது பார்த்தாலும் தியானமா? நான் ஒருத்தி இருக்கிறேன் என்பதையே மறந்துவிட்டீர்களா? என்னை ஏன் மணந்தீர்கள்?" என்று கேட்டாள்.

சாமியார் யோசித்தார்: "என் கிவளை மணந்தேன்? பசுவுக்காக. பசு ஏன்? பாலுக்குப் பால் கொடுக்க. பால எதற்கு? எலிகளைக் கொல். எதற்கு. எலிகளை ஏன் கொல்ல வேண்டும்? கோவணத்தைக் காப்பதற்காக....! சே!

ஒரு கோவணத்தால்தானே கிவ்வளவு தொல்லைகள்" என்று சாமியார் கோவணத்தையும் துறந்துவிட்டு, முழுத் துறவியாகிவிட்டார்.

42. நன்றி

தேவராஜன் சைக்கிளை வாசலில் நிறுத்திப் பூட்டினார். வீட்டுப் படிகளில் ஏறினார். 'சார்' என்ற குரல் கேட்டது. அவர் திரும்பினார். ஐயாதுரை நின்று கொண்டிருந்தான்.

ஐயாதுரை கடற்படையில் ஒரு மாலுமி; உள்ளூர் என். சி. சி. அலுவலகத்தில் வேலைபார்த்தான். நண்பர் ஒருவர் அவனைத் தேவராஜனுக்கு அறிமுகப் படுத்தியிருந்தார். ஐயாதுரை பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக் தேர்வு எழுத விரும்பினான். அவனுக்கு எப்போதாவது பாடத்தில் சந்தேகம் வந்தால் தேவராசனிடம் வருவான். தேவராசன் உபகாரச் சம்பளமல்லாத அவன் உபகாரமாட்டான். பட்டாளத்துப் பழக்கமா, ஆசிரியரிடம் உள்ள மரியாதையா? தேவராசனுக்குத் தெரிய வில்லை. அவன் அவரிடம் 'டியூஷன்' (Tuition) படித்தான் என்றுகூடச் சொல்லமுடியாது. எப்போதாவதுதான் ஒருநாள் வருவான்; சில கேள்விகள் கேட்பான்; போய்விடுவான்.

"என்ன, ஐயாதுரை? என்ன விஷயம்?" என்றார் அவர்.

"சார்! இன்றைக்குத் தேர்வு எழுதிவிட்டேன். இன்றைக்கு மாலையில் ஊருக்குப் போகிறேன்.

சொல்லிக் கொண்டு போகலாம் என்று வந்தேன்."

"தேர்வு எப்படி எழுதியிருக்கிறாய்?"

"உங்கள் தயவாலே நல்லபடியாக எழுதி யிருக்கிறேன்."

தேவராசன் வினாத்தாளை வாங்கினார். ஒவ்வொரு வினாவுக்கும் அவன் எப்படி விடை எழுதினான் என்று கேட்டுத் தெரிந்து கொண்டார்.

"பாஸ் (pass) பண்ணிவிடுவாயா, சார்?"

"சந்தேகமே இல்லை. சந்தோஷமாக ஊருக்குப் போ."

ஐயாதுரை அவரைக் கும்பிட்டு விட்டுப்போனான். மாதங்கள் கழிந்தன. திடீரென்று ஒருநாள் மந்திரியானம் அவன் அவருடைய வீட்டிற்கு வந்தான். அவர் கல்லூரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

"என்ன ஐயாதுரை? ஏது இந்தப் பக்கம்?"

"எங்கள் காட்டில் மிளகுச்செடி போட்டிருந்தோம். உங்களுக்குக் கொடுத்துவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்" என்று சொன்ன ஐயாதுரை ஒரு குட்டிச் சாக்கினை அவர்முன் வைத்தான். அந்தச் சாக்கு நிறைய மிளகாய் வற்றல்!

"ஐயாதுரை! எனக்கு இந்தப் பழக்கமெல்லாம் பிடிக்காது. எடுத்துக்கொண்டு போய் விடு"

அவனுடைய கண்கள் கலங்கின. "சார்! என்மேல் அன்பு இருந்தால் இதை வாங்கிக்கொள்.

ரூங்கள், சார்! கிதைக்கொடுப்பதற்காகத்தான்
ராஜபாளையத்திலிருந்து வந்தேன்" என்றான்.

தேவராஜன் சிறிது நேரம் குழப்பமடைந்தார்.
ஒரு பெருமூச்சுக்குப் பிறகு, "சரி, நன்றி" என்றார்.

"நான்தான், சார், உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். உங்களுக்குக் கல்லூரிக்கு நேரமாகிவிட்டது. கின்னொரு சமயம் வந்து பார்க்கிறேன்" என்று சொல்லி விட்டு அவன் கிளம்பினான்.

அவரும் நெகிழ்ந்த நெஞ்சுக்தோடு கல்லூரிக்குப் புறப்பட்டார்.

43. கற்பு - 1

சம்பந்தம் பின்னணியைத் தெரியாதவர்கள் யாரும் திருக்குறுங்குடியில் கிடையாது. உள்ளூர் ஜீயர் மடத்தில் கணக்குப்பிள்ளை, அவர். மடத்து நிர்வாகம் முழுதுமே அவருடைய கையில்தான் கிருந்தது. அவர் தம் அறையில் உட்கார்ந்து தீவிரமாகக் கணக்கு எழுதிக்கொண்டிருந்தார்.

"சாமி! எங்கிரிச்சுக்கிடுறீங்களா?[1] நான் கூட்டிடுறேன்[2]" என்ற குரல் அவரை நிமிர வைத்தது.

எதிரே சிர் கிளம்பெண் துடைப்பத்துடன் நின்றுகொண்டிருந்தாள்.

"நீ யார்? குப்பம்மா எங்கே?" என்றார் பிள்ளை.

"என் பேரு வள்ளிங்க. குப்பம்மா எங்க அம்மா. அவருக்கு கின்னைக்கி சொகமில்லே."[3]

1,2,3 These are approximate pronunciations in informal spoken Tamil of:

1 எழுந்திருந்துகொள்கிறீர்களா?

2 நான் கூட்டிவிடுகிறேன்.

3 என் பெயர் வள்ளி [-ங்கள்: plural suffix attached in spoken Tamil to any phrase to show deferential respect].
குப்பம்மா எங்கள் அம்மா. அவருக்கு கின்றைக்குச் சுகமில்லே.

இப்படித் தொடங்கிய அவர்களுடைய உரையாடல் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. அவர்களுக்கிடையே உறவும் வளர்ந்தது.

* * *

இரவு மணி பத்து. சம்பந்தம் பிள்ளை தோளில் துண்டு போட்டுக்கொண்டு வெளியே கிளம்பினர். அவருடைய மனைவி சண்முகத்தம்மாள் அவருடைய கைத்தடியைக் கொண்டு வந்து கொடுத்தாள். "என்ன! இன்றைக்கு இரவும் மடத்தில் வேலை இருக்கிறதா?" என்று கேட்டாள். கழிந்த சில மாதங்களில் அவர் அடிக்கடி இரவில் கிளம்புவது சாதாரணமாகிவிட்டது. "ஆமாம். நெல்-கணக்கு முடிவேளை என்கிறது" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார் பிள்ளை.

சண்முகத்தம்மாள் கமலாவை எழுப்பினாள். ஐந்தே வயதான கமலா அவர்களுடைய மூத்த மகள். இரண்டாம் மகள் உமா பிறந்து பத்து மாதம் தான் ஆயிற்று. "தங்கச்சியைப் பார்த்துக்கொள். நான் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சண்முகத்தம்மாள் வெளியே வந்தாள்.



அமாவாசை கிருட்டும் கொள்ளைக்காரன் ஐம்புலிங்கத்தைப் பற்றிய வதந்திகளும் அம்மாளின் மனத்தைக் கலக்கின. என்றாலும் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற வெறியே மேலோங்கி நின்றது. அவள் பூனைபோலச் சம்பந்தம் பிள்ளையைத் தொடர்ந்தாள்.

வாய்க்காலைக் கடந்து தான் மடத்துக்குப் போக வேண்டும். ஆனால் பிள்ளையோ கடப்பதற்குப் பதில், வாய்க்கால் கரை-யோரமாகவே நடந்தார். சிறிது நேரத்தில் மறக்குடியில் ஒரு குடிசைக்குள் நுழைந்தார். அம்மாள் வந்த வழியே வீடு திரும்பினாள்.

மறு நாள் காலையில் சம்பந்தம் பிள்ளை வீடு திரும்பினார். வழக்கம்போல அவர் குளிப்பதற்காகச் செம்பு கொடுத்தாள் சண்முகத்தம்மாள். பிள்ளை அவருடைய கையைப் பிடிக்கப் பார்த்தார். அவள் விலகி நின்றுகொண்டு, "இன்று முதல் நான் உங்களைத் தொட மாட்டேன். உங்களுக்கு நான் எதற்கு? அந்த மறத்தி தான் இருக்கிறாளே!" என்றாள்.

* * *

சம்பந்தம் பிள்ளை சாகிற வரையில் அவள் அவரைத் தொடாமலே வாழ்ந்து விட்டாள்.

44. சமயங்கள்

தீபாவளி அன்றைக்குக் காலை. முருகனும் டேவிடும் கிணற்றடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அமெரிக்கனான டேவிடு நன்றாய்த் தமிழ் பேசுவார். முருகன் அவனைச் சாப்பிடக் கூப்பிட்டிருந்தான்.

"தீபாவளியை என் கொண்டாடுகிறீர்கள்?" என்று கேட்டார் டேவிடு.

"நரகாசுரன் என்ற அசுரனை விஷ்ணு கொன்றார். அந்த நல்ல நாள்தான் தீபாவளி."

"நீங்கள் சைவர் ஆயிற்றே? பிறகு விஷ்ணுவுக்கு விசேஷமான நாளை ஏன் கொண்டாடுகிறீர்கள்?"

"ஒரு பழமொழி கேட்டிருக்கிறீர்களா? 'அரியும் சிவனும் ஒண்ணு[1]; அறியாதார் வாயிலே மண்ணு[2]' என்பார்கள். வைணவப் பண்டிகைகளில் முக்கியமான வைகுண்ட ஏகாதசியைச் சைவர்களும் கொண்டாடுகிறார்கள். அன்றைக்கு அவர்கள் பெருமாள் கோயிலுக்குப் போவார்கள். திருச்சியில் ஸ்ரீரங்கநாதர் கோயிலில் பார்த்திருக்கிறீர்களா? தினமும் அங்கே வருகிறவர்களில் மிகப் பலர் சைவர்கள் இல்லையா?"

முருகன் வீட்டுக்குக் கிழக்குப் பக்கத்து

[1]Informal pronunciation of ஒன்று. [2]Informal pronunciation of மண்.

வீட்டில் ஒரு முஸ்லிம் குடும்பம் இருந்தது. அந்த வீட்டுப்பெண் பாத்திமா ஒரு வெற்றுத் தட்டுடன் இந்த வீட்டிற்குள் நுழைந்தாள். காலையில் முருகனின் மனைவி தீபாவளிப் பலகாரம் கொடுத்து அனுப்பியிருந்தாள். அந்தத் தட்டினைத் திருப்பிக் கொடுக்கவே பாத்திமா வந்தாள். "பலகாரம் எல்லாம் நன்றாய் இருந்தது" என்று அவள் சொன்னது கிண்ணையில் இருந்தவர்களுக்கும் கேட்டது.

"சிவனும் விஷ்ணுவும் ஒன்றுதான் என்றால் தனித்தனி உருவமும் கோவிலும் எதற்கு?" என்று கேட்டார் டேவிடு.

"நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. எங்களில் சிலர் ஒரு கடவுளைக் கும்பிடுகிறார்கள்; வேறு சிலர் வேறு கடவுளைக் கும்பிடுகிறார்கள். ஆனால் எங்கள் கடவுள்தான் கடவுள் என்றும் மற்றவர்கள் கடவுள் கடவுளில்லை என்றும் யாரும் நினைப்பதில்லை. நாகப்பட்டினத்துத் தர்க்காவில் முஸ்லிம்களோடு இந்துக்கள் கும்பிடுவார்கள். வேளாங்கண்ணி மாதாகோவிலில் கிறிஸ்துவர்களோடு இந்துக்கள் கும்பிடுவார்கள். பார்த்திருப்பீர்களே!"

மறுபடியும் உரையாடல் தடைபட்டது. இப்போது மேலவீட்டுப்பெண் சுசீலா முருகன்

வீட்டிற்கு வந்தாள். அவருடைய குடும்பம் கிறிஸ்துவக் குடும்பம். அவள் உள்ளே வந்ததும் முருகனின் மனைவி "வா, சுசீலா. சரியான சமயத்தில் வந்தாய். இந்தப் பலகாரத்தை எடுத்துக் கொள்" என்று, ஒரு தட்டில் வைத்துப் பலகாரம் கொடுத்தாள். "மன்னித்துக் கொள்ளுங்கள், அக்கா. நீங்கள் இந்தப் பலகாரங்களையெல்லாம் உங்கள் சாமிக்கு வைத்துக் கும்பிட்டிருப்பீர்கள். சாமிக்குப் படைத்ததால் இந்தப் பலகாரங்களை நாங்கள் சாப்பிடமாட்டோம்" என்றாள் சுசீலா.

இதைக் கேட்டுத் தின்னையில் முருகன் சிரித்துக் கொண்டான். இது கிறிஸ்துவக் கொள்கையா என்று டேவிடு குழப்பம் அடைந்தார்.

45. கிழக்கும் மேற்கும்

ஆறுமுகம் வீட்டிற்குள் நுழைந்த போது அவனுடைய மனைவி வடிவு அழுது கொண்டிருந்தாள். "ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?" என்றான் ஆறுமுகம்.

"உங்களுக்குச் செய்தி தெரியாதா? மத்தியானம் ரேடியோவிலே சொன்னார்கள். கென்னடியைச் சுட்டுக் கொன்றுவிட்டார்களாம்" என்று அழுதுகொண்டே சொன்னாள் வடிவு.

"அம்மா மத்தியானம் சாப்பிடவில்லை" என்றாள் அவர்களுடைய மகள்.

"உலகத்திலே நல்லவர்களையெல்லாம் கிப்படித்தான் கொன்று விடுகிறார்கள். என்ன செய்வது? வருத்தமாய்த்தான் கிருக்கிறது. கிருந்தாலும் நீ கிப்படிப் பட்டினி கிடக்கலாமா? உனக்காக கில்லாவிட்டாலும் உன் வயிற்றில் கிருக்கும் பிள்ளைக்காகவாவது சாப்பிட வேண்டாமா?" என்றான் ஆறுமுகம். அவளைக் கேற்றிச் சாப்பிட வைப்பது பெரும் பாடு ஆயிற்று.

வடிவைப் போலவே தமிழ்நாட்டில் பலபேர் அந்தச் செய்தியைக்கேட்டு தாங்க முடியாத வருத்தம் அடைந்திருப்பார்கள்

என்று ஆறுமுகத்துக்குத் தெரியும். ஏனே தெருவில் வாழ்ந்த ஒரு மூடன் செத்துப்-போனால்கூட வருத்தப்படுவார்களே! நல்லவர் ஒருவரின் சாவு அவர்களுக்கு எவ்வளவு வேதனையைக் கொடுக்கும்!

* * *

வடிவுக்கு ஆண்குழந்தை பிறந்தது. அவளுடைய விருப்பப்படியே குழந்தைக்குக் கென்னடி என்று பெயர்வைக்க முடிவு செய்தார்கள். பெயர்சூட்டு விழாவுக்கு ஆறுமுகம் தன் அபிமானிக்க நண்பர் ஜானை அழைத்திருந்தான். ஜானும் அவருடைய மனைவி மேரியும் வந்தார்கள்.

குருக்கள் வீட்டுக்கு வந்து சாஸ்திர முறைப்படி பூஜை நடத்தினார். பிள்ளை தாத்தாவின் மடியில் இருக்கப் "பையனை அப்பாவிடம் கொடுங்கள்" என்றார் குருக்கள். ஆறுமுகத்தின் மடிக்குக் குழந்தை வந்தது. "என்ன பெயர் என்று தினைத்துவைத்திருப்பீர்களே! மூன்று நடவை அந்தப் பெயரைச் சொல்லிக் கூப்-பிடுங்கள்" என்றார் குருக்கள்.

ஆறுமுகம் "கென்னடி...கென்னடி..கென்னடி" என்றான்.

குழந்தைக்கு எல்லோரும் விபூதி பூசி-

னர்கள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு ஆசாரி வந்து சேர்ந்தார். குழந்தைக்குக் காது குத்தினர். குழந்தை அழுவதைக் கேட்க மேரிக்கு வருத்தமாயிருந்தது. "பாவம்! சின்னக் குழந்தைக்கு எவ்வளவு வலி இருக்கும்!" என்றாள். "காது குத்துவது எதற்காக?" என்றான் ஜான்.

